අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 Fax +94 112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/02/04/08/04-11

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2024. 01. 05

சுற்றுநிருப இலக்கம் – 44/2023

அனைத்து அதிபர்களுக்கும்,

**பாடசாலை வீதிப் பாதுகாப்பு தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்**

**வீதிப் பாதுகாப்புக் கழகங்களை (Road Safety Club) பாடசாலை மட்டத்தில் தாபித்தல்.**

எமது நாட்டில் விதி விபத்துக்கள் காரணமாக வருடாந்தம் உயிரிழக்கும் மற்றும் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகும் நபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதன் காரணத்தினாலும் குறித்த தொகையில் உள்ளடங்கியுள்ள பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் எண்ணிக்கை கருத்தில் கொள்ளத்தக்க எண்ணிக்கையைக் கொண்டுள்ளமையினாலும், குறித்த நிலைமையானது இந் நாட்டின் தொழிற் படைக்கும் கல்வித் துறைக்கும் நேரடியாக மிகவும் பாதகமாக தாக்கத்தை செலுத்துகின்றமையினால் அவ்வாறான விபத்துக்களை தடுத்துகொள்வது தொடர்பாகவும் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

வீதிச் சட்டதிட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமை மற்றும் பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களை செலுத்துதல் போன்றன நாட்டில் வீதீ விபத்துக்களுக்கு பிரதானமான காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்பதுடன், இவற்றிற்கான தீர்வுகளைத் தேடும் போது குறுகிய கால, நடுத் தவணைக் கால மற்றும் நீண்ட கால திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று அவசியமாகின்றது.

நாட்டில் வீதி விபத்துக்களை தடுப்பதற்கான தேசிய நிறுவனமாக செயற்படும் "வீதிப் பாதுகாப்பு தொடர்பாக தேசிய சபை" இது தொடர்பாக விசேட கவனத்தை செலுத்தி விரிவான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்துள்ளதுடன், அத்துடன் இணைந்ததாக கல்வி அமைச்சுடன் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்தக்கூடிய வேலைத்திட்டம் ஒன்றும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனூடாக எதிர்கால பிரஜைகளாக சமூகத்தினுள் பிரவேசிக்கவிருக்கும் தற்போதைய பாடசாலை மாணவர்களுக்கு வீதி விபத்துக்கள் தொடர்பாக உரிய அறிவு மற்றும் அனுபவங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர் சமூகத்திற்கு வழிகாட்டும் ஆசிரியர்கள் மற்றும் கல்வியியல் கல்லூரி பயிலுனர்களை இது தொடர்பாக அறியப்படுத்தி அவர்கள் அனைவரையும் வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டமொன்றும் இத்துடன் இணைந்ததாக முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் படி பாடசாலை மாணவர்களது வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மாணவர்களது பங்குபற்றுகையுடன் பாடசாலை மட்டத்தில் "**வீதிப் பாதுகாப்புக் கழகங்களை** (Road Safety Club)" தாபித்து, வீதிப் போக்குவரத்து தொடர்பான அறிவு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக உபாய ரீதியான அனுபவங்களை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. "**வீதிப் பாதுகாப்புக் கழகங்களை** (Road Safety Club)"தாபித்தல் தொடர்பாக வெளியிடப்படும் இச் சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதனூடாக வீதிகளைப் பயன்படுத்தும்

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
Fax +94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
Fax +94112785162
secretary.education@moe.gov.lk

5. பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் வீதிப் பாதுகாப்புக் கழகத்தின் மாணவர் குழுப் பிரதிநிதித்துவத்திற்காக அங்கத்துவ மாணவர்கள் தெரிவுசெய்யப்படல் வேண்டும்.

6. வீதிப் போக்குவரத்து நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது வீதியில் வாகன கண்காணிப்புச் செயற்பாடுகளுக்காக தரம் 8 அல்லது அதற்கு மேல் வகுப்புக்களில் கற்கும் மாணவர்களை மாத்திரம் ஈடுபடுத்த வேண்டும்.

7. வீதிப் போக்குவரத்து கழகத்தின் (Road Safety Club) பணிகள் கீழ்வருமாறு,

7.1 வீதிப் பாதுகாப்புச் செயன்முறையை நோக்காகக் கொண்டு தேசிய பாதுகாப்புக் கொள்கைக்கு அமைவாக நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்.

7.2 வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன கண்காணிப்பு செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலையின் ஒட்டுமொத்த மாணவர் சமூகத்தையும் அறியப்படுத்துதல்.

7.3 பாடசாலை சமூகத்தை (பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், அயலவர்கள்) வீதிப் பாதுகாப்பு செயற்பாடுகளில் பங்கேற்கச் செய்தல்.

7.4 வாகன கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் அங்கத்தவர்களை பயிற்றுவித்தல் மற்றும் வலுவூட்டுதல்.

7.5 வீதிப் பாதுகாப்பு தொடர்பாக செயற்படும் தேசிய நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

7.6 பாடசாலை வாகன கண்காணிப்புச் செயன்முறைக்குரிய மேற்பார்வை மற்றும் வழிகாட்டல் பணிகள்.

7.7 பாடசாலை வீதிப் பாதுகாப்புக் கழகத்தின், அங்கத்தவர்களுக்கு அவசியமான உபகரணங்கள், அணிகலன்கள் மற்றும் அவை சார்ந்த சேவைகளை வழங்க நடவடிக்கையெடுத்தல்.

7.8 பாடசாலை வீதிப் பாதுகாப்புக் கழகத்திற்குரிய தகவல் முறைமை ஒன்றை பேணுதல்.

7.9 பாடசாலை வீதிப் பாதுகாப்புக் கழகங்களுக்கு (Road Safety Club) அனுசரனையாளர்களை அடையாளம் கண்டு அவர்களது உதவுகளைப் பெற்றுக்கொள்ளல்.

7.10 வருடாந்தம் இடம்பெறும் உலகளாவிய வீதிப் பாதுகாப்பு வாரத்துடன் இணைந்ததாக அயலில் உள்ள பாடசாலைகளையும் இணைத்து ஒன்றிணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

7.11 பாடசாலை உரித்தாகும் பிரதேசத்தின் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுடன் சிறந்த ஒருங்கிணைப்பினை பேணுதல் மற்றும் பாடசாலையைச் சூழவுள்ள பிரதேசத்தை பாதுகாப்பான வலயம் ஒன்றாக பேணுதல்.

7.12 பாடசாலை பாதுகாப்பு வேலைத்திட்டத்தை வினைத்திறனுடனும் விளைதிறனுடமும் மேற்கொள்ளும் அங்கத்தவர்களுக்கு பதக்கங்கள், மானியங்கள், சான்றிதழ்கள், பரிசில்கள் மற்றும் பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கையெடுத்தல்.

பாடசாலை வீதிப் பாதுகாப்புக் கழகம் தொடர்பான வழிகாட்டல் கையேட்டிற்கு அமைய, குறித்த கழகத்தின் அங்கத்தவர்களுக்கு தேசிய

மட்டம் வரையில் இதன் மூலமாக பதக்கங்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

வீதிப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டமானது தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செயன்முறை என்பதனால் மேற்படி ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலையின் வீதிப் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து, இந்த ஆலோசனைகளை நிறைவேற்றுவது அனைத்து அதிபர்களதும் பொறுப்பாகும்.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் பாடசாலை வீதிப் பாதுகாப்புக் கழகங்களை தாபித்து, இந் நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனுடனும் விளைதிறன் மிக்க வகையிலும் நடாத்திச் செல்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை இத்தால் வலியுறுத்துகின்றேன்.

**வசந்தா பெரேரா**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**

<u>பிரதிகள்</u>:

01. செயலாளர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு – தகவலுக்கு/ உரிய நடவடிக்கைக்கு
02. பொலிஸ் மா அதிபர், ஸ்ரீ லங்கா பொலிஸ் – தகவலுக்கு/ உரிய நடவடிக்கைக்கு
03. தலைவர், வீதிப் பாதுகாப்பு தொடர்பாக தேசிய சபை – தகவலுக்கு/ உரிய நடவடிக்கைக்கு
04. சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள் – தகவலுக்கு/ உரிய நடவடிக்கைக்கு
05. சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் - தகவலுக்கு/ உரிய நடவடிக்கைக்கு
06. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் - தகவலுக்கு/ உரிய நடவடிக்கைக்கு
07. சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் - தகவலுக்கு/ உரிய நடவடிக்கைக்கு
08. கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம் - தகவலுக்கு/ உரிய நடவடிக்கைக்கு